வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1272/அ4/2025 நாள். .03.2025

-----

பொருள்: பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி– அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 11–12 ஆம் வகுப்புகளில் உள்ள மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் வரலாறு, வணிகவியல் பாடங்களை உள்ளடக்கிய மூன்றாவது பாடப்பிரிவு–2704 (Third Group) அனுமதிப்பட்ட பள்ளிகளின் விவரங்கள் கோருதல் – தொடர்பாக.

பார்வை: 1) அரசாணை (நிலை) எண்.196, பள்ளிக்கல்வி (க.க5(1)) துறை நாள்.03.11.2023

2) சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.052348/டபிள்யு2/இ3/2024 நாள்.13.03.2025

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2022 நிலவரப்படி மேற்கொள்ளப்பட்ட பணியாளர் நிர்ணயத்தின்படி மேல்நிலைப் பாடப்பிரிவுகளில் மூன்றாவது பாடப்பிரிவு இல்லாத அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 160க்கும் அதிகமான மாணவர் எண்ணிக்கை உள்ள 20 அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் முதல் கட்டமாக வரலாறு, வணிகவியல் பாடங்களை உள்ளடக்கிய மூன்றாவது பாடப்பிரிவு (2704–History, Economics, Commerce, Accountancy) தொடங்கிட உத்தேசிக்கப்பட்டு, பார்வை 2–ல் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகளின்படி ஒரு பள்ளிக்கு 2 முதுகலை ஆசிரியர்கள் வீதம் மொத்தம் 40 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மூன்றாவது பாடப்பிரிவாக (2704) – மேல்நிலைப்பிரிவு (வரலாறு, பொருளியல், வணிகவியல் மற்றும் கணக்குபதிவியல்) தொடங்கப்பட்டு செயல்பட்டு வரும் அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கை விவரங்களை கீழ்கொடுக்கப்பட்டுள்ள Google Link–இல் உள்ளீடு செய்துவிட்டு இணைப்பில் கண்டுள்ள Excel படிவத்தை பூர்த்தி செய்து தலைமையாசிரியர் கையொப்பத்துடன் 19.03.2025 இன்று மதியம் 2.00 மணிக்குள் அ4 பிரிவில் நேரில் சமர்ப்பிக்குமாறு அனைத்து மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் தெரிவிக்கப்படுகிறது. பிரிவு தொடங்கப்படவில்லை எனில் இன்மை அறிக்கை அனுப்பிடவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : – படிவம்

// ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு/நகராட்சி/மேல்நிலைப்பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.